உ
சிவமயம்

கனடா, சைவநெறித் தொண்டர் கழகத்தின்

# சிவநெறி




நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்திகாட்டுவ
கொல்லந மன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே !!

'எம் கடன் பணி செய்து கிடப்பதே'

*இது விற்பனைக்கல்ல.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன்
விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை
முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்தஅதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

திருச்சிற்றம்பலம்.

அருளியது:

திருஞனசம்பந்தமூர்த்தி நாயனார் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சர்வலோக நாயகம்
சகலபூத ஸ்தாபிதம்
சர்வஜீவ ரட்ஷகம்
நமாமி யக்ஞ ஈஸ்வரம்

திருச்சிற்றம்பலம்

ஆதியானவன் அந்தமற்ற
அலகிலாப் பெருஞ்சோதியான்
பாதியாள் யக்ஞேஸ்வரி ஒரு
பங்கினன் பிரபஞ்சம் செய்
நீதியான் யக்ஞேஸ்வரன் உறை
நெடுநகர் உயர் தருநிறை
தீதிலாத்திரு பிரைடன்ரைவ் பதி
சேருவார் அருள் சேர்வாரே

போற்றியருள் யக்ஞேஸ்வரன்
பொன்னார் திருவடிகள்
போற்றி அன்னை யக்ஞேஸ்வரி
புனித மலர்ப் பாதம்
போற்றி அரன் கழல்போற்று நான்
மறையோடு ஆகமங்கள்
போற்றி சிவமணமே கமழ்
பிரைடன் ரைவ்மா நகரே.

திருச்சிற்றம்பலம்

செய்யுள் ஆக்கம்:
கணியன் நா.அமிர்தரட்ணராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரந்தருவாயோ சரஸ்வதிதாயே ?

வரந்தருவாயோ கலை
வாணியே எந்தன்
சிரந்தனில் நல்ல
சிந்தனை வளர

அரங்கினில் உனது
அறங்களை உரைக்க
நிரந்தரமாயெனில் தமிழ்
நன்னெறி திளைக்க

சுரந்தருவாயோ சுவைப்
பாடல்கள் புனைய
கரங்களில்வந்து ஆய
கலைகளும் அணைய

விரல்களின் துணையால்
நல்வீணைகள் இசைக்க
சரஸ்வதிதேவியுன் அருள்
என்னில் நிலைக்க

வரந்தருவாயோ கலை
வாணியே எனக்கு.......

– அமிர்த.கண்ணப்பன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பொன்று போதுமல்லோ

நாமமிட்டும் தொழுகைசெய்தும்
நான்மறை ஓது போவதில்லை — ஈசனுக்கு
தேகம்சொட்ட தொண்டுசெய்ய
தேடும்நிலை கூடுமல்லோ

மண்டியிட்டும் மனனம்செய்தும்
மலர்வதில்லை மனக்கணக்கு — சிவனை
மனதில்வைக்க நினைவில்வைக்க
மலையருவி பாயுமல்லோ

பாலிறைத்தும் பழங்கள்வைத்தும்
பண்புவந்து சேர்வதில்லை — பரமன்
படைப்புகளில் அன்புவைக்க பல
பெருமையுனை நாடுமல்லோ

மாலையிட்டும் முழக்கமிட்டும்
மந்திரங்கள் தேவையில்லை — மன்னன்
மகிமையினை நீ உணர்தல்
மண்ணுயிரின் தேவையல்லோ

அறிவுரையும் அறுசுவையும்
அனைவருக்கும் தேவையில்லை — இறைவன்
அறநெறிகள் நாம் உரைத்தால்
அதிசயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பேதகர்:* அன்பர்களே! இரண்டாயிரமாம் ஆண்டு உலகம் அழிந்து விடப்போகிறது. மோட்ஷ ராட்ஷியத்தில் சேர, ஆண்டவனின் குழந்தைகளாக, உங்களின் சகல துன்பங்கள், உங்கள் பாவங்கள் அனைத்தை யும் போக்கிட, எதிர்காலத்தில் நீங்கள் வளத்தோடு வாழ, உங்கள் குழந்தைகள் நல்லவராக வல்லவராக நீங்கள் சாத்தானின் பிடியில் இருந்து விடுபட எங் களுடைய மதத்தில் வந்து சேருங்கள். உங்களுக் காக எங்களுடைய ஆண்டவனின் வீடு என்றும் திறந்திருக்கிறது.

*ஆறுமுகத்தார்:* எல்லாஞ்சரிதான், ஆனால் ஒண்டுமட்டும் உதைக்கிது.

*போதகரின் உதவியாளர்:* என்ன? என்ன?.....................

*ஆறுமுகத்தார்:* பாருங்க, இப்ப இரண்டாயிரத்தி ஒண்ட ல்லோ?

*போ.உதவியாளர்:* ஓ அதா? அவர் இரண்டாயிடரத்தியிருபது எண்டு சொல்லுறதுக்கு, பழக்கதோசத்தில இரண்டாயிரம் சொல்லிப்போட்டார். நீங்கள் சிந்திக்காதிங்கள், அவர் சொல்லுற மற்ற எல்லாம் உண்மை.

*ஆறுமுகத்தார்:* ஆ. அட பாவிகளா.....................

—அமிர்த முருகதாசன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வரங்கள் தருவாயே

காதவழி தூரமெங்கும்
காணவல்ல ஓரிறைவன்
காத்ததனை அறிந்திடவே
கருணையினைத் தருவாயோ

வேதவழி நாநொழுக
வேண்டும்வரம் நீகொடுக்க
வேதியுனை உணர்வோமே
வேளையைநீ தருவாயே

கீதவழி காதில்அலை
கிட்டுமுந்தன் கோவிலடி
கேதீசனே கதியாமே
கேட்டவரம் தருவாயே

நிதிவழி நாம்நடக்க
நித்முனை நாம்நினைக்க
நாதவடி வுடையானே
நல்லருளைத் தருவாயே

பாதவழி பாறையெங்கும்
பாரம்பர்யப் பாடல்சொல்லிப்
போதனைகள் புனைவோமே
பலபுண்ணியங்கள் தருவாயே.

—அமிர்தகண்ணப்பன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசை செய்வது எம்மொழியில்....

பூசை செய்வது எம்மொழியில் என்பதுநம்மிடம் இன்று எழுந்துள்ள பெரும் பிரச்சனை. காலம் காலமாக சமஸ்கிருதத்தில் செய்யப்பட்டு வரும் எமது ஆலய வழிபாடுகளை தமிழில்மாற்றியமைக்க வேண்டும் என்பது இன்று பலரின் வாதமாக உள்ளது. இதற்கு இவர்கள் கூறும் விளக்கம்.

'புரியாத மொழியில் என்ன பூசெய்' என்பதே. இது நியாயமாகத்தான் தோன்றுகிறது. தமிழில் பூசை செய்ய முடியாதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். ஏனெனில் பழங்காலந் தொட்டே தமிழில் பூசை செய்யப்பட்டு வருகிறது. இதற்குச் சான்றுகள். நமது நாயன்மார்களின் அருட் பாடல்களே ஆகும்.

ஆனால். இறைவனுக்கு பூசை செய்வதற்கு எந்த மெழியைப் பயன் படுத்துவ தென்பது அவரவர் விருப்பமாக இருக்க வேணடும். இதில் அடுத்தவரின் தலையீடு என்பது குளியலறையை எட்டிப்பார்ப்பது போன்ற ஈனச் செயல். ஒருவருக்கு அர்ச்சகர் தேவையில்லை பூ. பழம். மொழி கூடத்தேவையில்லை. என்று தோன் -றினால் 'உளம் உருகி வழிபடுதலே போதும்' என்பது இந்து மதம்.

இதில் எமக்கு கவலை ஏற்படுத்தும் விடயம் என்ன வெனறால். கருணாநிதிகளும் ராமசாமிகளும் சமஸ்கிருதத்தை எமை எதிர்க்கச் சொல்வதும். ஐரேப்பியர்களுடம் அரேபியர்களும் எமைத் தமிழில் அர்ச்சனை செய்யச்சொல்வதும் தான்.

ஆடு நனைவது பற்றிஇந்த ஓனாய்களுக்கு கவலை ஏன் என்பது சிந்திக்க வேண்டிய விடயம். இவர்கள் வேற்று மொழியில் பெயர் வைத்துக் கெண்டு. தமிழர் அபிமானிகளாக முயல்கிறார்கள். தொடர்ச்சி பக18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமையேது அவனுக்கு.......

---

இல்லார்க்கும் இன்பம் வைத்தான்
இயலார்க்கும் ஒன்றை இயலவைத்தான்

இவ்வகத்தே உள்ளோரை
நல்லோரெனப் புகழ்தலும்
நன்றல்லோரென இகழ்தலும்
நாளுமிங்கு நடப்பதே

நன்றென்றும் தீதென்றும்
நாதன் சிவனுக் கொன்றுமில்லை.

---

சீவன் சிவனோடு.........

---

சீவன் சிவனோடு நின்று
சிந்து ஒன்று பாட..
சிந்தையிதற்காக வெரு
விந்தைக் கவி வரைய..
முந்தை வினைகளெல்லாம்
முற்றும் மறைந்தோட..
அன்பன் சிவனென்னை -
அன்பாய் அள்ளியணைக்க..
அன்னை சிவதேவியோ
ஆனந்த பாணம் அளிக்க..
ஆனந்த மானந்தமென்று ஆடுகிறேன்
அன்பே சிவமென்று பாடுகிறேன்

தேனில்லை சுவையென்று கூறுகிறேன்
அருஞ்சுவை சிவமென்று கூறுகிறேன்
பகுத்தெதையும் நோக்கிடாப்
பரமேசன் சீவனென்றே கூறுகிறேன்.

----------சூர்யன் -------------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16-ஆம் பக்கத் தொடர்ச்சி....

புதரினுள் அவர்கள் ஒழிவதைக் கண்டும் காணாதது போல் தமக்குள் பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்களைப் பின் தொடர்ந்து வந்த கொள்ளையர்கள் எங்கும் அவர்களைக் காணாது எமாற்றமுற்றவேளை ரிஷியையும் மாணாக்கர்களையும் கணடனர். ரிஷியிடம் சென்று, "துறவியே இவ்வழியே சென்ற ஓர் ஆணையும் ஓர் பெண்ணையும் கண்டீரா" என்று கேட்க, "கண்டேன்" என்றார் ரிஷி.

"அவர்கள் எங்கு சென்றார்கள்" என்றொருவன் கேட்க, "அவர்கள் அதோ அந்த தேனாற்றை தாண்டி அவ்விரு மலைகளை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதை கண்டேன்" என்றார்.

"அப்படியா" என்று சொல்லிவிட்டு, கூரிய கத்திகளும் கொடிய எண்ணமும் கொண்டு வந்த கொள்ளையர் ரிஷி சொன்னதை நம்பி ஆற்றுக்கப்பால் உள்ள மலைகளை நோக்கி ஓடத்தொங்கினர்.

ரிஷியின் சிஷ்யர்களுக்குள் குழப்பம. 'பொய் சொல்லக்கூடாதெனும் குரு இப்படிப் பொய் சொல்லி விட்டாரே!' என்று.

அவர்களில் ஓர் மாணவன் துணிந்து ரிஷியை நோக்கி "குருவே பொய்சொல்லல் ஆகா என்றீர் நீரே பொய்யுரைத்து விட்டீரே" என்றான்.

குருவோ புன்னகைத்தவாறே, "பொய்யுரைத்தல் பாவமல்ல, புரைதீர்ந்த நன்மை பயக்குமெனில்." எனறார். சிஷ்யர்கள் உலக வாழ்வியல் உண்மைதனை உணர்ந்து கொண்டனர்.

-சூர்யன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை பாடி மகிழ்வோம்

---

இன்னிசை பாடி மகிழ்வோம்
ஈசன் புகழ் பாடி மகிழ்வோம்
பாவிகள் யாருமல்ல என்ற
பரமேசன் புகழ் பாடி மகிழ்வோம்

துன்பம் பல வந்தாலே
தூயவனீசனை யெண்ணவென் றெண்ணி
துயரிலின்பம் கண்டு மகிழ்வோம்
ஈசனைத் தொழுதென்றும் மகிழ்வோம்

தேசமெங்கும் பொருள் செய்து
தேவைகளைப் பெற்றிடவே
ஆண்டவன்அனைத்தையும் தந்துவிட்டான்
ஆரையு மவன் விட்டதில்லை

அற்ப பொருளுக்காய் அலைந்துலையும்
அற்ப மனிதரையும் காத்திடுவான்
சொற்ப பொழுதிலும் பிழை செய்யும்
சொற்ப அறிவுடையோரையும் காத்திடுவான்

பாவம் பழி யென்று ஏதுமில்லை
பரமேசன் துணையின்றி யேதுமில்லை
சோகம் கொள்ளத்தேவையில்லை
சொக்க நாதன் நம்மை காத்திடுவான்.

---

இன்பமினி வர ஒவ்வேன்–உனை
துன்பந்தனை வரக் கேட்பேன்
என்றுமுனை யெண்ண
துன்பமின்றி யின்பம் –என்றும்
துணை புரியாது, சிவமே, சிவமே.

------------சூர்யன்-------------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தமு முன்னையெண்ணிட வேண்டுமய்யா................

---

ஈசனே நேசனே
மலை வாசனே
அன்னைக்கும் மேலான அன்பனே
அயர்ச்சி போக்கும் நண்பனே
ஈசனே நேசனே
மலை வாசனே.

பூக்கெண்டு உனைப் பூஜித்து
புண்ணியம் தேட வேண்டுமய்யா.

நிறணிந்து உனை நினைந்து
நித்தமும் கைதொழ வேண்டுமய்யா.

உனையே என் குருவாக்கி
உலகறிந்திட வேண்டுமய்யா.

தினைப் பொழுதேனும் பிறர்க்காக
தேம்பும் மனம் வேண்டுமய்யா.

கணப்பொழுதும் உனையெண்ணி
களிக்கும் மனம் வேண்டுமய்யா.

நினைப்பதெல்லாம் பெற்றிடவெண்ணும்
ஆசையற்றிட வேண்டுமய்யா.

சுகமாக வாழ்ந்திட வெண்ணும்
சூன்ய மனம் அற்றிட வேண்டுமய்யர்.

நின் திருப்பாதக்கமலம் பற்றியே
பிறவிப் பிணி யகற்றிட வேண்டுமய்யா.

-------------சூர்யன்-------------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ நெறி அன்பர்கட்கு,

வணக்கம்!

நாம் புலம் பெயர்ந்து வந்த இத் தேசத்திலும் சிவ வழிபாட்டை மேலான புண்ணிய நெறி யென உணர்ந்தவர்கள் பலர் வாழ்கிறோம். கொலம்பஸ் இத்தேசத்தில் காலடி எடுத்துவைக்க முன்னும் இக்கண்ட த்தில் சிவ வழிபாடுடையவர்களாகவே வாழ்ந்ததற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன். இக்கண்டத்தில் உள்ள கொலறாடோ ஆற்றையடுத்த குன்று ஒன்றின் மேல் பல ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட சிவலிங்கம் ஒன்று இருப்பதை ஆராச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அமெரிக்காவில் வாழந்த மாயர் என்னும் இனத்தவர்கள் சிவவழிபாட்டை மேற்கொண்டு வாழ்ந்தனர் என்பதற்கு அவர்கள் வசித்த பெருமலை உச்சியின் சமதளத்தில் சிவசின்னங்களும் சிவவழிபாட்டு யந்திரங்களும் வரையப் பட்டுளதாகச், சரித்திரச் சான்றுகள் உள்ளதாக ஆய் வாளர்கள் கூறுகின்றனர். பணடைய சிவபூமி ஆகிய இக் கண்டத்தில் நாம் வந்து குடியேறுவதற்கு என்ன தவம் செய்தோமோ!

இங்கு பல்வேறு அமைப்புகள் ஆலயங் கள் சமயப் பள்ளிகளைச் சைவ சமய ஏடுகளை அறிஞ ர்களும் ஆச்சாரியார்களும் நடத்துவது மிகவும் போற்றுத ற்குரியது.

பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நமது சமயம் பலம் வாய்ந்தது கற்கோட்டை போன்ற தத்துவங்கள் அடங்கியதாயினும் இப்பழம் கோட்டையுள் சிலந்திவலைகளும் அழுக்குகளும் தூசிகளும் மூடியிருப் பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. சமுதாய வாழ் வில் நடைபெறும் ஆவணங்கள் பொய்மைகள் ஊழல்கள் மோசடிகள் மிகப்பழம் சமயமான சைவத்திலும் ஒட்டிக் கொள்வது ஆச்சரியமனதல்ல. மிகப்புதிய சமயங்களில் கூடப் பேசும் தத்துவங்களுக்கும் நடத்தும் கொடுமைள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோக்கியத்தனங்களுக்கும் பெரும் வேறுபாட்டைக் காணக் கூடியதாக இருக்கிறது. ஆயிரம் கொலைகளைச் செய் தாயினும் ஒரு சிலரையேனும் மதம் மாற்றுவதால் மோட்சராச்சியத்தில் தங்களுக்கு நிரந்தரமான இடம் ஒதுக்கப்படும் என அவர்கள் நம்புகிறார்கள்.

பிரெஞ்சிய அரசியற் புரட்சி ஏற்பட முன் பிரபுக்கள், அடிமைகள், பரம்பரை அறிஞர்கள், மூடர்கள் என்ற பேதம் அவர்கள் மதக் கோட்பாடாக இருந்ததற்குச் சரித்திரச் சான்றுகள் உண்டு. வேண்டப் படாத இப் பேதங்கள் இந்து மதத்தையும் பீடித்துள்ளது பெரும் வேதனைக்குரியது.

பிரெஞ்சிய அரசியற் புரட்சியாலும் தொழிலாளர் புரட்சியாலும், பல சமதர்மப் புரட்சிகளாலும் இனபேதங்களால்ஏற்பட்ட அநியாயங்கள் கண்டிக்கப் பட்டது போன்று 'ஒரே வானம் ஒரே பூமி ஒரே சாதி ஒரே நீதி' என்ற லட்சியம் ஈடேற இந்துக்கள் கொடி நாட்ட வேண்டிய கடமையுடையோராவர்

சங்கப்புலவர் நக்கீரனாருடன் வம்பு பண்ணி அவரின் ஏச்சுக்களைக் கேட்டு ரசித்து விளையாடியவர் சிவ பெருமான். எல்லாப் பொருளுக்கும் உடையவரான அவரை "அரனே உம் போல் இரந்துண்டு வாழ்வதில்லை" என்று ஏசியதை வாழ்த்தாக எண்ணிய பெருமான்.

தாயை இழந்த பன்றிக்குட்டிகளின் பசிதீர்க்க தாய்ப்பன்றியாய் மாறிப் பாலூட்டிய தாயுமானவர். கண்ணப்பர் உமிழ்ந்த எச்சிற் தண்ணீரை அபிஷேகமாகவும், அவர் மென்று பார்த்த இறைச்சியை உணவாகவும் ஏற்று அன்புடன் அணைத்தவர். அவர் புலையராய்ச் சென்று ஞனம் அளித்தவர், வேடராய்ச் சென்று வரம் பல கொடுத்தவர். தூய்மையோ, அழுக்கோ எனப் பாராது யாவற்க்கும் அருள்பவர் யாவையுமானவர். அவரை வணங்கும் நாம் ஆணவத்தால் தாழச்சி உயற்ச்சி கொள்ளலாமா? "குற்றநீ குணங்கள்நீ கூடலால வயிலாய்" என்று அவரைப் போற்று கிறார் அப்பரடிகளும் . <u>எம்கடன் பணி செய்து கிடப்பதே</u> <u>சிவ நெறி.</u>

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாதன் சிவ நாமம்.

---

சிவ நாமம் சொல்லுவோம்
சிவ நாமம் சொல்லுவோம்

சிந்தனை வளர்ந்திடவே
சிவ நாமம் சொல்லுவோம்

நிந்தனை மறந்திடவே
சிவ நாமம் சொல்லுவோம்

நீறணிந்து மகிழ்ந்திடவே
சிவ நாமம் சொல்லுவோம்

நீசரை மன்னித்திடவே
சிவ நாமம் சொல்லுவோம்

நேசராய் வாழ்ந்திடவே
சிவ நாமம் சொல்லுவோம்

தேசம் வளம் பெறவே
சிவ நாமம் சொல்லுவோம்

தெவிட்டா இன்பம் பெற்றிடவே
சிவ நாமம் சொல்லுவோம்

நாதன் சிவ நாமஞ்சொல்லி
நன்மை பல செய்வோம்

நாளும் சிவ நாமஞ் சொல்லின்
நன்மையே என்றும்

----------சூர்யன்----------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிஞ்சு மொழிப் பாட்டு.

பிள்ளைபாடும் பாட்டு-மனம்
கொள்ளை கொள்ளும் பாட்டு
பிஞ்சு மொழிப் பாட்டு
கொஞ்சு மொழிப் பாட்டு
மழலைப் பாட்டுக் கேட்டு
மானிடனே தலை யாட்டு

மக்கள் குறை போக்கும்
மகேசன் பற்றிப் பாட்டு
எண்ணி யதை அளிக்கும்
ஈசன் பற்றிப் பாட்டு

ஆதி சிவன் எங்கள் சாமி
அவனுக்கிணை எங்கே காமி
பாதி உமை பங்கன்-அவன்
பக்தர் யாவர்க்கும் நண்பன்
மேதினி யெங்கும் எம்மை-என்றும்
மகிழ்விக்கும் நேசன்

அம்மாவும் அவனென்போம்
அப்பாவும் அவனென்போம்
பொய்யரை அண்டவிடோம்-ஈசன்
புகழ் பாடி வாழ்ந்திடுவோம்

---

நஞ்சுடை நெஞ்சுடையாரிலும்
பஞ்சுடை மனத்துடையாரிலும்
பிஞ்சு மொழிச் சொல்லுடையாரிலும்
தஞ்சம் சிவனருள் என்றும்
நெஞ்சம் சிவன் புகழ் சொல்லின்
மிஞ்சும் சிவகதி வாழ்வாய்.

---சூர்யன்---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரை தீர்ந்த நன்மை பயக்குமெனில்............

இமயமலை அடிவாரத்தில் ஓர் சிறு கிராமத்துக் கண்மையில் உள்ள அடர்ந்த காட்டில் ஓர் ரிஷி சிஷ்யர்களுடன் வாழ்ந்து வந்தார். அவர் உண்மை பேசுவதை வாழ்வின் உயர்ந்த கொள்கைகளில் ஒன்றாக க் கொண்டு வாழ்ந்தார். அதையே மக்களுக்கும் தம் சீடர் களுக்கும் போதித்து வந்தார்.

அன்று ஓர் நாள் அவரின் போதனை க்கு ஒரு சோதனை வந்தது.

புதிதாகக் கல்யாணம் ஆன தம்பதி ஒன்று சுவாமி தரிசனத்துக்காக ரிஷி வசிக்கும் காட்டுக் குள் உள்ள காட்டீஸ்வரர் கோயிலுக்குச் சென்று தரிசனம் முடிந்து வந்து கொண்டிருக்கும்போது வழிப்பறி செய்யும் கொள்ளையர்கள் அவர்களுக்குச் சிறிது தூரத் துக்கு முன் சென்ற நபரிடம் பணம் பொருள்களைப் பறி ப்பதை பார்த்தார்கள்.

இவர்களே புதுமணத் தம்பதியர். பெ ண்ணின் உடலில் முக்கால் வாசி அங்கங்களுக்கு தங்கம் வெள்ளியென அணிந்திருந்தாள். ஆணும் சில நகைகள் அணிந்திருந்தான். இத்தோடு மட்டுமல்லாது அக்கொள் ளையர்கள் பெண் பித்தர்கள் என்றும் கேள்விப்பட்டிருந் தார்கள்.

கொள்ளையன் தனியொருவனெனில் எதிர்த்துப் பொராடமுடியும், அங்கு நிற்பதோ ஐவர். பலம் கூடியவர்களிடம் மோதுவதை விட தப்பிச்செல்வது புத்தி சாலித்தனம் என்பது அம்மனிதனுக்குப் புரிய அவன் தன் மனையாளின் கைகளைப் பிடித்துக் கொண்டு திக்குத் தெரியாது ஓட ஆரம்பித்தான். ரிஷியின்ஆஸ்ரமம் தாண்டி அப்பால் தெரிந்த அடர்ந்த புதரினுள் ஒளிந்து கெண்டனர்.

ரிஷியும் சிஷ்யர்களும் ஆண்மீகம் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தவேளை,

தொடர்ச்சி ப 9ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவக் குடிகள்

-----------

காலம் பகைத்து-நம்மை
கம்பு பாம்பாய்க் கடித்தாலும்

ஞாலம் முழுதும் இன்று
நமக்கெதிராய் வந்தாலும்

பாவிகள் நாமென்று
பரிதவிக்கத் தேவையில்லை

சோகங்கள் சூழ்ந்தவேளை
சொந்தங்கள்நமைத்தவிர்த்தாலும்

பாதகமே பலனாய் வந்து
பரிதவித்திட வைத்தாலும்

காலனுக் கஞ்சிட-நாம்
காலத்தின் குடிகளல்ல

சர்வ சீவனுக்குள்ளும் வாளும்
குறைவிலா சிவக்குடிகளன்றோ.

---

சிற்றெறும்பால் வேளம்
தனையிழந்து
தனைக் கொல்லும்

சிறிது பெரிதென்று
யாதொன்று மில்லை
சிவனவன் படைப்பினிலே.

-சூர்யன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்ப ஞானம் பெற்றிடுவோம்.......

சர்வம் சிவமயம் என்பது இந்து மதம். இங்கு உயர்வு தாழ்வுக்கு உரிய இடம் எங்ஙனம் வாய்க்கும். சூத்திரர் முதலிய வண்ணங்கள் படைத்தது தெய்வ சாத்திரங்களல்ல. ஆசாமிகளின் சூழ்ச்சிச செருகல்கள். இடைச்செருகல்களை செருகியவர்கள் இடைச்செருகல்களால் புண்பட்டோரின் சொல் ஈட்டிச் செருகல்களால் வலி கெண்டும் இவர்கள் செருகல்கள் சிறப்புகள் என்று புலம்புகிறார்கள்இவர்களுக்கு:

ஆதிசங்கரர் அருமையாகப்படித்து அரனை அறிந்து கொண்டார். இருந்தும் சில அறியாமைகளுடையே வாழ்ந்து வந்தார் அன்றோர் நாள் அரன் பதி காசிக் கண்மையில் அவர் சென்று கொன்டிருந்த போது. மண்டை யேடுகளும் நாய்களும் கேடுடை மணமும் சூழ. ஓர் நரன் தமை நெருங்குவதை கண்டு அருவருப் புற்று அருகில் வந்தவனை 'அகல்க' என்றார். அதற்கு அவன் "யாரை அகலச் சொல்கிறாய் இவ்வுடலையா? இவ்வாண்மாவையா? உடலாகின் நீயும் அழுக்கு நானும் அழுக்கு, இறந்திடேல் உன் னுடலுக்கும் என்னுடலுக்கும் ஒரே நிலைதான். ஆண்மாவாகில் அரனுக்கு நரியும் நரனும் சமமே. நின் அறியாமையை அதனால் வந்த அகந்தமினை அழித்திடுவார் சிவனே." என்று சொல்லி மறைந்தார் புலையர்.

சங்கரர் ஞானம் பெற்றார். சகலதிலும் உமாபதியைக் கண்டார் இதை நாம் நன்குணர்ந்து இன்பஞானம் பெற்றிடலாம்.

– சூர்யன் –

07 பக்கத் தொடர்ச்சி

இவர்களின் பொறிகளில் நாம் பலியாகி விடக்கூடாது. நம்மைச் செப்பனிட்டுச் செல்வோம் சிவ பதம் தொழுவோம். சிறப்புடன் வாழ்வோம்.

– சூர்யன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி காட்டிடும் நாயகன் உருவமே

பல்வழி பார்ப்பது பரமனார் உருவினை
நல்வழி காண்பது நாயகன் அருளினை
இல்வழி சொல்வது இறையவர் திருவினை
கல்வழி காட்டுமோர் கருணையோ கருணையே.

பூவிழி பார்ப்பது புன்னகை உன்எழில்
நாவழி உணர்ந்தது நல்லன உன்சுவை
செவிவழி கேட்டவை சேவடி உன்புகழ்
கவிவழி கூறுவேன் காவியம் ஆயிரம்.

புவிவழி பிறந்தது புண்ணியம் உன்பயன்
செவ்வழி சேர்ந்தது சேவைகள் உன்னருள்
தவவழி தரிப்பதோ தாதையே உன்நிலை
சிவவழி சிறப்புறும் சோர்ந்திடா எம்மனம்

மறவழி மரிப்பது மாதவன் பெருஞ்செயல்
அறவழி நடப்பது ஆதவன் அருஞ்செயல்
இறைவழி இணைவது இன்பமே தருஞ்செயல்
அறிவொளி காட்டுவாய் ஆனந்தக் கூத்தனே

– அமிர்தகண்ணப்பன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையாள்: ஐயா இன்னிக்கு, எந்தசாமிக்குங்கையா அர்ச்ச
னை பண்ணுறதுங்கய்யா.

மந்திரி: முருகர், பிள்ளையார், மாரியம்மன், ஐயப்பன்,
எல்லாருக்கும் அர்ச்சனை பண்ணீடு.

உதவியாளள்:கடவுள் இல்லையின்னு மேடையில பேசுறீங்க....

மந்திரி: ஆமாப்பா பேசுறன், பேசலண்ணா எவன் மதிக்கி
றான். இங்க பாருப்பா சட்டுண்ணு பேமஸ் ஆகணு
முண்ணா நாத்தீகம் பேசணும். அதான் பேசுறன்,
சாமிமேல இருக்கிற பயத்தால அர்ச்சனை
பண்ணுறன்.

உதவியாளன்: !!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!.

-------------சூர்யன்-------------------

"நாமார்க்கும் குடியல்லோம்,
நமனை யஞ்சோம்."

திருநாவுக்கரசு சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈச்சர மாலை

*காளகஸ்தி*

பெருமான் உருவை பலவுங் காண்பினும்
திருமால் பெருமான் பாதங்கள் ஆயினும்
குருவாய் ஒருவன் கழற்றனைத் தொழுகினும்
கருவாய் அருள்வோன் காளத்தி ஈசனே.

*புவனேச்சரம்*

சிவனின்றி கடமில்லை சிவைசெய்ய உருவில்லை
அவனின்றி உயிரில்லை அதிகாலை கதிரில்லை
புவனேசன் பெயர்சொல்லி புகழ்பாட வரம்கேட்டு
சிவநேசன் தவஞ்செய்ய, சிறப்பொன்று தருவாயே.

*கேதீச்சரம்*

மந்திரங்கள் தானொலிக்க மாந்தையெங்கும் மணிஒலிக்க
முத்தியருள் சேர்க்கவேங்கும் நந்தவனம் மலர்சொரிய
வந்தனங்கள் பாடிக்கொண்டு வந்துகூடும் மாந்தருக்கு
எந்நாளும் துணையிருப்பான் எங்கள்திருக் கேதீசனே

*கோணேச்சரம்*

முத்தானதோர் மூன்றுகடல் எழில்கள் உடையோனே
நித்தமுனை அடியார்தொழ வினைகள் தவிர்ப்போனே
பித்தனிவன் ஒருநாளேனும் துதிக்கஅருள் செய்வாயே
சத்தமிடும் அலைமேல்த்தவழ் திருக் கோணேச்சரத்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவப்புகழ் பாடு
## சிறப்பினை நாடு

வீசுங்காற்றிலும் விளைகின்ற பொருளிலும்
பேசிடும் அற்புதப் பிளம்பது சிவனே
மாசுஅற்றவர் மனதினில் வாழ்ந்திடும்
ஈசன் என்றுநீ இயம்பிடு மனமே

பேசும் பேச்சிலும் பாதியெம் மூச்சிலும்
வாசம் கொண்டவர் வாழிய தினமே
பசுமைவற்றிடா பைந்தமிழ் பூத்திடத்
தேசன் பொன்னடி தொழுதிடு மனமே

பாடும் பாட்டிலும் பல்கலை ஏட்டிலும்
கூடி இருப்பவன் குருளங்கள் சிவனே
வாடும் அடியவர் தமையென்றும் காத்திடும்
வடிவுடை உருவதை வழிபடும் மனமே

நாடும் நலத்திலும் நடுகின்ற நிலத்திலும்
தேடும் நிலைகளைத் தருவபவன் சிவனே
கூடும்நலங்கொண்டு கோடி சுகம்பெற
ஈடில்லா ஈசனைப் பாடுவோம் தினமே.

— அமிர்த.கண்ணப்பன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலகம்
கனடா சைவ நெறித் தொண்டர் கழகம்.
பங்குனி01,2001.

அன்புமிக்க கனடா வாழ் சைவ பெருமக்களுக்கு, எல்லாம் வல்ல சிவப் பரம் பொருளின் திருவருள் கிட்ட வாழ்த்தி வணங்குகிறோம்.

கனடா சைவ நெறி தொண்டர் கழகத்தின் சிவ நெறி என்கிற இப்பத்திரிகை சென்ற ஆண்டு, காலா ண்டு இதழாக வெளிவரும் என்று அறிவித்தலோடு முதற் பிரச வமானது பல்வேறு காரணங்களால் அடுத்த இதழ் வெளி வராது அடங்கி நின்றது.

பல்வேறு பத்திரிகைகளும் சமய சஞ்சிகைகளும் வெளியாகும் இத்தேசத்தில், வாசிப்பதற்கு நேரமற்றவர் களாகவே மக்கள் வாழ்கிறார்கள். இருப்பினும் ஒரு சில ரேனும் திரும்பிக்கொள்வார்களென எழுத்தாளர்க ளும் அறிஞர்களும் தமது ஆக்கங்களை படைத்து வருகின்றா ர்கள்

இந்த நோக்கோடு சிவ நெறி மிகப் பழமை வாய்ந்த எமது சமய நெறியையும், சிவப்பரம் பொருளின் மகிமையையும் பெரியவர்கள், புதியவர்களின் சிந்தனை யோடு தருகின்றது. இன்றைய சூழ்நிலையில்இளைஞர்கள் மத்தியில் அருகி வரும் சமய பற்றும், சமய அறிவும் மிகவும் அபாய கரமானது. தமது வாழ்வை நெறிப்படுத்த முடியாத,தமது கலாச்சாரத்தை பாதுகாக்கமுடியாத ஒரு சந்ததி எதிர்காலத்தில் தோன்றி விடக்கூடாது. என்ற நோக்கோடு நம் சிவ நெறி வெளி வருகிறது. இது வரும் சமுதாயம் தமிழன் வாழ் வியலை, தமிழன் நெறியை அறிந்து கொள்ள முன்வருவோருக்கு உதவ முன்வரும் அணில் முயற்ச்சி. அணில் முதுகில் ராமர்கள் கோடிடட்டும். "எம் கடன் பணி செய்து கிடப்பதே"

இவ்வண்ணம்
பொதுச் செயலாளர்
கனடா சைவ நெறித் தொண்டர்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: வெளியீட்டுக்குழு, கனடா சைவ நெறித் தொண்டர் கழகம்.

கணனியாள்கை: அமிர்த.கண்ணப்பன்

முகவரி: 2777,kipling ave, #714
Etobicoke,Ont,
Canada, M9V 4M2.

ஆக்கமும், ஊக்கமும், விமர்சனமும் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

இப்பத்திரிகையில் வெளியிடப்படும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் யாவும் ஆக்கியவரின் எண்ணங்யளே, இவைக்கு பத்திரிகை பெறுப்பேற்காது.

-ஆர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org